**மினிபே பிரதேச சபை - 2023**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மினிபே பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களுடன் கூடிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மினிபே பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள்,

நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம், முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள், ஹசலக பொது நூலகத்தை புணரமைத்தல் மற்றும் ஹசலக குருலுபொல நீர் தாங்கிக்கு காப்பொன்றை இடுவதற்காக ரூபா 115,542 தொகை குறைவாக மற்றும் ஹசலக குருலுபொல நீர் தாங்கிக்கு நீர் சுத்திகரிப்பான ஒன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை பூர்த்தி செய்திருக்காத போதும், ரூபா 4,607,472 மூலதனமாக்கப்பட்டதன் காரணமாக, அத் தொகை கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்து கொள்வதென. | கட்டிடங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 23,800 ஆன 05 UPS பெட்டரிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், பகல் நேர காப்பு நிலையமொன்றிற்கு கொள்வனவு செய்திருந்த ரூபா 218,350 ஆன தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டில் இனங்கண்ட ரூபா 615,750 முத்திரை கட்டண வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | பொது வைப்புக் கணக்கில் குறிப்பிடப்படும் 23 சந்தர்ப்பங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 247,289 இனை வருமானத்திற்கு எடுக்கும் போது பொது வைப்பு கணக்கை வரவு வைத்த போதும், செலவுக் குறிப்பு இடப்படவில்லை. இதன் காரணமாக கணக்கு சமப்பட்ட விதம் தெளிவாகவில்லை. | இது பற்றி கண்டறிந்த திருத்திக் கொள்வதென. | சரியாக இரட்டை பதிவு வைக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று 02 நிலையான வைப்புக்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 214,189 வட்டியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2024 நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்து கொள்வதென. | கிடைக்க வேண்டிய வட்டி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டினுள், செலுத்தப்படாத சம்பளமும் படிகளும் மற்றும் செலவினம் கடன்கொடுனர் குறை ஒதுக்கீடு ரூபா 106,248 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | கடன்கொடுனர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | சபையினால் இருப்பு கணக்கீடு செய்யப்படும் போது, ஆண்டின் கொள்வனவுகள் செலவினக் கணக்கை வரவு வைத்து, காசு புத்தகத்தை செலவு வைத்த பின்னர் அந்த மொத்த செலவு இருப்பை வரவு வைத்து, செலவினக் கணக்கை செலவு வைக்கும் முறை பின்பற்றப்பட்டிருந்த போதும், அங்கு ரூபா 1,602,198 காகிதாதிகள் கொள்வனவு இரண்டு முறை செலவின கணக்கிற்கு செலவு வைத்த காரணத்தால் ஆண்டின் செலவினம் அப் பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கணக்கு சமப்பட்ட விதம் தெளிவாகவில்லை. | 2024 நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்து கொள்வதென. | சேலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு ஆரம்ப திகதியில் ஊழியர் கடன் மீதியை முன்கொண்டு வரும் போது, இனங்கண்ட ரூபா 192,664 வித்தியாசத்தை தொங்கல் கணக்கிற்கு வரவு வைக்க வேண்டிய போதும், திரண்ட நிதியத்திற்கு வரவு வைத்து வித்தியாசம் பதிவழிக்கப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |

### 1.6.2 தொங்கல் கணக்கு

| **விடயம்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கடந்த ஆண்டில் ரூபா 367,300 ஆகவிருந்த தொங்கல் கணக்கு மீதி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 1,318,262 வரை அதிகரித்திருந்ததுடன், இது பற்றி கண்டறிந்து கணக்குகளில் தேவையான செம்மையாக்கங்களை செய்து தீர்த்திருக்கவில்லை. | கணக்கு தயாரிக்கும் போது இடம் பெற்றுள்ள தவறுகளை 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்து கொள்வதென. | குறைகளை இனங்கண்டு தொங்கல் கணக்கை தீர்க்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கூட்டுத் தொகை ரூபா 937,286 ஆன 05 சொத்து விடயங்களிற்கு மற்றும் ரூபா 8,030,316 ஆன பொறுப்பு விடயங்களிற்குரிய ஆவணங்கள், கோவைகள் மற்றும் அட்டவணைகள் சமர்பிக்கப்படாத காரணத்தால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | இது தொடர்பில் மேலும் கண்டறிந்து அறிக்கை இடுவதென. | கணக்கு மீதிகளை உறுதி செய்து கொள்ள தேவையான அட்டவணைகளை சரியாக பேணிக் கொள்ள வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 24 பிரிவு | சபையின் பாதை இன்வென்றியில் குறிப்பிடப்படும் 212 பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆண்டு முதல் ஓரளவு பாதை அளவை நடவடிக்கைகளை முடிவுறுத்தி பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுப்பதென. | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | 127 பிரிவு | சுபையினால் பொது செயற்பாடுகளிற்கு பயன்படுத்தும் 99 காணித் துண்டுகளின் உரிமையை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி ஆணையாளரிற்கு உரிய காணிகளில் ஒரு பகுதிக்காக அளவை கட்டணம் செலுத்தி அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், பிரச்சினை உடன்கூடிய காணிகள் தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொள்வதென. | காணிகின் உரிமையை சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 மார்ச் 17 இன் 3/4/10 பொது | பிரதேச சபை அதிகார எல்லைக்கு வெளியில் சபை | பிரதேச சபை செயற்பாடுகளிற்கு | முறையான அங்கீகாரத்தை |

| | | | |
|---|---|---|---|
| இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 05.6 பிரிவு | வாகனங்களை பயன்படுத்தும் போது, மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், அவ்வாறு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது 20 சந்தர்ப்பங்களில் வாகனங்களை பயன்படுத்தி எரிபொருள் 519 லீற்றர்களிற்கு ரூபா 163,434 தொகை செலவிடப்பட்டிருந்தது. | மாத்திரம் பங்குபற்றியுள்ளது எனவும், குறித்த கடமைக்கு மேலதிகமாக உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், உள்ளிட்ட நிறுவன கடமைகளிற்கு பயன்படுத்தியதென. | பெற்று வாகனங்களை பயன்படுத்த வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,502,728 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,284,008 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டு இருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில்லிட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 1,335,885 | 1,389,485 | 1,293,683 | 2,937,444 | 1,335,885 | 1,333,672 | 848,500 | 2,841,642 |
| (ii) | வாடகை | 4,681,391 | 5,498,461 | 4,178,375 | 16,018,132 | 7,592,442 | 5,627,771 | 4,187,388 | 14,698,046 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 1,262,500 | 2,070,175 | 2,118,400 | 208,650 | 1,717,000 | 1,360,008 | 1,279,477 | 256,845 |
| (iv) | ஏனைய வருமானம் | 7,499,219 | 18,869,569 | 19,583,448 | 14,904,470 | 12,609,000 | 16,147,595 | 10,114,377 | 15,618,349 |
| | மொத்தம் | 14,778,995 | 27,827,690 | 27,173,906 | 34,068,696 | 23,254,327 | 24,469,046 | 16,429,742 | 33,414,882 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி மற்றும் வரி** | | |
| (i) | வீதவரி அலகுகொன்றின் நிலுவை ரூபா 10,000 இனை விஞ்சிய 35 ஆதனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 747,164 தொகையை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்றும் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலும் அறவிட வேண்டிய தொகையை அறவிட நடமாடும் சேவை நிகழ்சித் திட்டங்களை நடாத்துவதென. | நிலுவை வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 15 அரச நிறுவனங்களின் 68 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 251,680 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட குறித்த நிறுவனங்களை அறிவூட்டியுள்ளதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | சபைக்குரிய 05 பொது சந்தைகளின் 29 கடையறைகளிலிருந்து மற்றும் 02 நடமாடும் வியாபார கூடங்களிலிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 3,234,477 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவற்றில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கும் இடையிலான காலமாக அறவிடப்படாத மீதி ரூபா 1,553,560 தொகையும் 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக அறவிட வேண்டிய மீதி ரூபா 1,104,599 ஆனது. | உடன்படிக்கை கைச்சாத்திட குத்தகை தாரர்களிற்கு தொடர்ந்தும் கடிதம் மூலம் அழைப்பு விடுத்த போதும், அவர்கள் வருகை தராததால், உடன்படிக்கை கைச்சாத்திட **முடியாது போனதுடன்,** அந்த கடையறைகளுடன் கூடிய காணியை சபைக்கு ஒப்படைக்க தாமதித்த காரணத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கவும் முடியாதுள்ளதென. | நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ)** | **நீர் வருமானம்** | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 5,834,512 ஆன நிலுவை நீர் கட்டணம் நிலவியதுடன், அவற்றில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கும் இடையிலான காலமாக அறவிடப்படாத மீதி ரூபா 1,513,355 தொகையும், 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக அறவிடப்படாத மீதி ரூபா 1,814,520 தொகை நிலவிய போதும், அறவிட்டிருக்கவில்லை. | விஷேட நடமாடும் சேவை நடாத்தி நிலுவை நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

**(ஈ) அறிவித்தல் பலகை வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று 28 அறிவித்தல் பலகைகளில் இருந்து ரூபா 208,650 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறிவித்தல் பலகை கணிப்பீடொன்றை மேற்கொண்டுள்ளதுடன், இரண்டாம் நினைவூட்டல் கடிதமும் அனுப்பப்பட்டுள்ளதென. | நிலுவை அறிவித்தல் பலகை வருமானத்தை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 79 முதல் 84 வரையான பிரிவுகளின் ஏற்பாடுகள் பிரகாரம், மீளாய்வாண்டினுள் சபையினால் நீர் வழங்கல் தொடர்பாக எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்வரும் அபிவிருத்தி உத்தேசம் மற்றும் பொது மக்களிடமிருந்து கிடைக்கும் உத்தேசங்களுடன் கணிப்பீடொன்றை மேற்கொண்டு முன்னுரிமை மீது புதிய நிர்மாணத்தை மேற்கொள்வதென. | அதிகார பிரதேச மக்களின் பொது நலன்புரிக்காக சட்டத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் பிரகாரம், மலசல கழிவு எடுத்துச் செல்லல் மற்றும் கழிவகற்றல் பிரதேச சபையினால் மேற்கொள்ள வேண்டிய போதும், கலி வண்டியொன்றை பெற்றுக் கொள்ள மற்றும் மலசல சுத்திகரிப்பு அலகொன்றை ஆரம்பிக்க சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கலி வண்டியொன்றை பெற்றுக் கொள்ள உள்ளூராட்சி ஆணையாளரிற்கு கோரிக்கை விடவும், மலசல சுத்திகரிப்பு அலகொன்றை தித்தவெல்ல கழிவுத் தொட்டிலில் ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளதென. | பொது மக்கள் சுகாதாரத்திற்காக மேற்கொள்ள வேண்டிய பணிகளை மேற்கொள்ள வேண்டும் |
| (இ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 27 பிரிவின் கீழ் சபை அதிகார பிரதேசத்திற்குரிய பாதைகளை மேம்படுத்தல் மற்றும் புதிய பாதைகளை நிர்மாணித்தல் சபைக்குரிய பணியான போதும், மீளாய்வாண்டினுள் பாதைகளை மேம்படுத்தல் மற்றும் புதிய பாதைகளை நிர்மாணிப்பதற்காக சபை நிதியத்திலிருந்து | முன்னுரிமையை இனங்கண்டு நடவடிக்கை எடுப்பதுடன், சபைக்கு சொந்தமாக போதிய நிதி இல்லாததால், சிரமதானங்களின் மூலம் பாதைகளை நிர்மாணிப்பதென. | பொது பயன்பாட்டு சேவைகளை மேம்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வித தொகையும் செலவிட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | பிரதேச சபையினால் நடாத்திச் செல்லும் 11 நீர் கருத்திட்டங்களின் நீர் மாதிரிகள் பரீட்சிப்பு செய்யப்பட்டிருக்காததுடன், பாவனையாளர்களிற்கு விநியோகிக்கும் நீரின் தகைமையை இனங்கண்டிருக்கவில்லை. அதன் மூலம் பிரதேச மக்களின் சுகாதாரம் தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | சுத்திகரித்த குடிநீரை வழங்கும் கருத்திட்டமொன்றை பிரதேச சபையின் புதிய வருமான மூலமாக ஆரம்பிக்க திட்டமிட்டு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதென. | நீரின் தகைமையை பரீட்சித்து தரமான நீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 இணங்கானப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1997 ஆண்டில் சபைக்கு சொந்தமான காணியொன்றில் அனுமதியின்றி நிர்மாணித்திருந்த அத்திவாரமொன்றை முன்னால் தவிசாளரினால் உடைத்து அகற்றியதன் காரணமாக ரூபா 500,000 நட்டத்தை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்துடன், சபையை எவரும் பிரதிநிதிப்படுத்தாத காரணத்தால், ரூபா 500,000 இழப்பீட்டு மற்றும் வழக்கு கட்டணமாக ரூபா 30,500 ஆக ரூபா 530,500 தொகையை செலுத்துமாறு ஏகமனதாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. இந்த ரூபா 530,500 தொகைக்காக நி.பி. 104(04) விசாரணையின் போது 04 பேர்களிடமிருந்து ரூபா 134,950 வீதம் அறவிட தீர்மானிக்கப்பட்ட போதும், அறவிட்டிருக்கவில்லை. | தற்போது வழக்கு செயற்பாடுகளிற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென. | பொறுப்வாய்ந்த நபர்களிடமிருந்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு சபைக்குரிய 09 சொத்துக்களை குத்தகை வழங்கியதில் ரூபா 1,280,711 குத்தகை தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. அவற்றில் ஆண்டு 01 இற்கும் 05 இற்குமிடையிலான காலமாக அறவிடப்படாத மீதி ரூபா 1,177,211 தொகையும், 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாக அறவிடப்படாத மீதி ரூபா 103,500 ஆனது. | இந்த நிலுவையை அறவிடுவது தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஹசலக வியாபார கட்டிடத் தொகுதியில் 20 கடையறைகளிலிருந்து ரூபா 11,255,232 குத்தகை அறவிட வேண்டிய போதும், குத்தகைதாரர் இத் தொகையை செலுத்துவதனை புறக்கணித்திருந்ததுடன், இக் கடையறைகளின் கோவை பரீட்சிப்பின் போது, சபை மற்றும் குத்தகைதாரரிற்கு இடையே 2009 ஆண்டின் பின்னர் உடன்படிக்கை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அனைத்து கடையறைகளினதும் குத்தகை உடன்படிக்கை பிரகாரம், அடி 13 x 29 அளவிலான போதும், இக் கடையறைகள் அடி 13 x 60 அளவு நீளத்துடன் நிர்மாணிக்கப்பட்டிருந்துடன், கடையறைகளின் குத்தகைதாரர்கள் கடையறையின் பின்புறமாக நிலையாக குடியிருப்பதாகவும், இந்த வியாபார கட்டிடத் தொகுதியின் மேல் மாடியில் கட்டிட நிர்மாணத்தை சபை மேற்கொள்ள வேண்டிய போதும், குத்தகைதாரர்கள் அனுமதியின்றி மேல் மாடியை நிர்மாணித்திருந்த சந்தர்ப்பமும், இங்கு ஒரே முறையில் அறவிடும் முற்பணமும் அறவிட்டிருக்கவில்லை. | சபையினால் இது தொடர்பாக எழுத்து மூலம் அறிவுறுத்தல் செய்துள்ள போதும், குத்தகைதாரர்களினால் எவ்வித இணக்கத்தையும் காண்பிக்கவில்லையென. | அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றவும் அனைத்து குத்தகை தொகையையும் காலரீதியாக அறவிட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் வேலை கடன்படுனர் மீதி ரூபா 2,458,970 ஆனதுடன், அவற்றில் ஆண்டு 01 இற்கும் 05 இற்குமிடையிலான காலத்தை விஞ்சிய மீதி ரூபா 39,083 தொகையும், 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 746,961 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து சரியான தகவல்களை அறிக்கையிடுவதென. | பெறவேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலவிய வேலை கடன்கொடுனர் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 854,044 ஆனதுடன், அவற்றில் ஆண்டு 01 இற்கும் 05 இற்குமிடையிலான காலத்தை விஞ்சிய மீதி ரூபா 74,083 தொகையும், 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 779,961 தொகையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் வேலைகளை ஆக்கபூர்வமாக பூர்த்தி செய்யாததால், இறுதி பகுதித் தொகை செலுத்தப்படவில்லையென. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபையினால் வருடாந்தம் குத்தகைக்கு வழங்கிய 05 வாராந்த சந்தைகளில் இருந்து ரூபா 451,027 தொகை 2020 ஆண்டு முதல் அறவிட அல்லது சட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட குறித்த தரப்பினரிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதுடன், சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதென. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஊ) | சபையின் மொத்த நீர் பாவனையாளர் எண்ணிக்கை 1,864 ஆவதுடன், அவற்றில் 271 பாவனையாளர்களின் நீர் மாணிகள் செயலிழந்துள்ள போதும், இந்த நீர் மாணிகளை செயற்படும் நிலைக்கு மாற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. செயலிழந்த நீர் மாணிகள் காணப்படும் வீட்டு பாவனையாளர்களிடம் இருந்து ரூபா 250 மற்றும் வியாபார பாவனையாளர்களிடம் இருந்து ரூபா 500 மாக கட்டணம் அறவிடுவதன் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டுள்ளது. | செயலிழந்த நீர் மாணிகள் பற்றிய கணிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நீர் மாணிகள் பொருத்தப்பட்டு வருவதென. | நீர் மாணிகள் பொருத்தி கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தொகை ரூபா 1,978,050 ஆன 03 வாகனங்கள் 08 ஆண்டு காலமாக ஓட்ட நிலையில் இல்லாததுடன், இந்த வாகனங்களை திருத்துவதற்கு அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கெப் வண்டி மற்றும் டெக்கடரை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், டேலரை ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பதென. | குறித்த செயற்பாடுகளை விரைவில் முடிவுறுத்த வேண்டும். |
| (ஆ) | 2020 ஆண்டின் போது முச்சக்கர வண்டி தரிப்பிடங்களிற்காக தயாரிக்கப்பட்ட ரூபா 297,500 பெறுமதியான 17 பெயர் பலகைகள் பொருத்தப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | ஹசலக பொலிசுடன் இணைந்த முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை முறையாக நிலைப்படுத்தி இந்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு திட்டமிடுவது என. | முச்சக்கர வண்டி தரிப்பிட நிலையங்களை முறையாக்கி கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரூபா 71,949,560 செலவில் புர எழுச்சி கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் வர்க்க அடி 7000 அளவு மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியளவிலும் பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டது. | நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தனியார் துறையின் உதவி பெற்று இங்கு ஆக்கபூர்வமான கருத்திட்டமொன்றை செயற்படுத்த திட்டமிட்டு உள்ளதென. | ஆக்கபூர்வ பணிகளிற்காக பயன்படுத்த வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு 2000 ஒக்டோபர் 20 திகதிய இலக்கம் 4/3/9672 கொண்ட ஒப்படை கட்டளையினால் ஒப்படைத்துள்ள ஹசலக வாராந்த சந்தை காணியில் அனுமதியற்ற வதிவாளர் ஒருவர் 07 பர்சஸ் அளவான காணிப் பகுதியொன்றை பிடித்துக் கொண்டுள்ள போதும், அனுமதியற்றவரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனுமதியற்ற வதிவாளரை அகற்றுவது தொடர்பாக தற்போது உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக சட்ட ரீதியான செயற்பாடுகள் எடுத்துள்ளது என. | அனுமதியற்ற கைப்பற்றுதலை அகற்ற வேண்டும். |

**3.6 கருத்திட்டம், பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேரகங்தொட்டை குடிநீர் உத்தேச திட்டத்தை நிர்மாணிப்பதற்காக 2012 ஆண்டின் போது, ரூபா 286,155 ஆன தொகை செலவிட்டுள்ள போதும், உரிய நியமமின்றி நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு உள்ளதனால், கருத்திட்டம் கைவிப்பட்டிருந்தது. | நீர் கருத்திட்டத்தை நியமமின்றி நிர்மாணித்த காரணத்தால் கைவிடப்பட்டுள்ளதென. | திட்டமிட்ட பணிகளை உரியவாறு மேற்கொள்ள வேண்டும். |

**3.7 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகார மற்றும் உள்ளவாரான ஆளணியினரை ஒப்பிடுகையில் 08 பதவிகளில் 12 வெற்றிடங்களும், ஒரு பதவியில் 02 மிகைகளும் காணப்பட்டன. | புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாததால், வெற்றிடங்கள் காணப்படுவதென. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்**

**நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஒழுங்குகள் பிரகாரம், பிரதேச சபை மேற்கொள்ள வேண்டிய 04 நோக்கங்கள் பக்கம் கவனம் செலுத்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மீது கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். |